முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1195

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.01.2023, வெள்ளிக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
மாறுதலை உலகினில் செய்யும் முகாந்திரமாக
மாதவபலம் கொண்டு வந்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 22 ம் நாள் 06.01.2023, வெள்ளிக்கிழமை)
கோள்குற்றம் சர்வ வினைகளையும் குவலயத்தில்
களைந்து மக்களை காக்கும் வண்ணம்
3. வண்ணமுடன் அவதாரம் புரிந்த
வள்ளலே ஆறுமுக அரங்கனே
எண்ணமதில் உன்னை நிலைநிறுத்தி
இந்த யுகத்தார் நாமஜெபங்கள் புரிந்துவர
4. வருபவர்க்கு அரங்கன் உன் சக்திவழி
வையகத்தில் பெரும் பாதுகாப்பு உண்டாகும்
தர்மகுணம்கொண்டு உன் அன்னதான சேவையை
தரணியில் எவர் கடைபிடித்து தர்மம் தொடர்கின்றாரோ
5. தொடர்கின்ற மக்கள் அனைவருக்கும்
தண்டாயுதன் என் அருளும் துணையும் பரிபூரணமாக
ஆகவே ஞானமாக வந்தடைந்து அவரவர்க்கும் அழியாமை எனும் மகா சக்தி
சக்தியதும் அரங்கன் உன் தீட்சையாலே சடாட்சரமாய் சர்வபலமாய் வந்துகலந்தருளும்
6. அருளவே அரங்கன் நீயே கலியின் சிறந்தஞானி
அன்னதனால் உலகோர் உன்பால் சரணடைந்து
இருள் வெல்ல இனிதே தீட்சை ஏற்று
இணைந்து உன்பால் தொடர் தர்மத்தை செய்துவர
7. வருபவர்க்கு வாழ்வில் மாற்றம் உண்டு
வையகத்தில் நிலை தன்மை பெருகி
பெருமைபட ஆறுமுகன் என் காட்சி வெளிப்பாடோடு
பிசகின்றி இந்த பேருலகில் ஞானிகளாக உலவநேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–